වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

ANNUAL REPORT

2017/2018

සීමාසහිත රක්නා ආරක්ෂක ලංකා

வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்கா

Rakna Arakshaka Lanka Ltd

No 143/A,Kirulapone Avenue, Colombo 05. | +94 112 674 815

உள்ளடக்கம் பக்கம்

ஆண்டறிக்கை பற்றி 01

வளங்கள், மூலோபாயங்கள், விடயப் பரப்பு மற்றும் வரயறைகள் 02

பொருண்மைத் தன்மை, அறிக்கையிடல் படிவங்கள், முன்பாதுகாப்புக் கோட்பாடுகள் 03

உறுதிப்படுத்தல் மற்றும் உள்ளடக்கம் 04

வ/ப ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி 05-06

நோக்கு, பணி மற்றும் குறிக்கோள் 07

தலைவரின் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் ஆசிச் செய்தி 08-09

பணிப்பாளர் சபை 10

எமது அணுகுமுறை, மனித மூலதனத்தின் பெறுமதி மேம்படுத்தும் உபாயமுறைகள் 10-12

பதவியணி 13

ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுசெய்தல் 14

பயிற்சி மற்றும் அபிவிருத்தி, செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் ஒழுக்காற்றுச் செயன்முறை 15

இணக்கப்பாடு 16

நிறுவனப் படிநிலை 17-20

தரைத் தொழிற்பாடுகள் 21

கடல்சார் தொழிற்பாடுகள் 22

தீ மற்றும் திடீர் அனர்த்த பதில் நடவடிக்கைப் பாடசாலை 22

சமையல் சேவை பிரிவு 23

நிதிக் கூற்றுக்கள், நிதி அறிக்கையிடலில் பணிப்பாளர்களின் பொறுப்பு 23-24

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 25-28

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 29-70

இந்த அறிக்கையைப் பற்றி

எமது 2017/2018 ஆண்டறிக்கைக்கு வரவவேற்கின்றோம். இந்த ஆண்டறிக்கையானது 2018 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் றக்னா ஆரக்ஷக லங்கா லிமிடெட் (RALL) இன் தொழிற்பாட்டுச் சூழல், நிர்வாகம் மற்றும் தொழிற்பாடுகள், எமது மூலோபாயம், எமது பங்குதாரர்களுக்காக உருவாக்கப்பட்ட பெறுமதி ஆகியவற்றிற்கு ஏற்ப எமது செயற்திறன் பற்றிய வெளிப்படையான மதிப்பீட்டை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கூட்டுறவு அறிக்கையிடலில் சிறந்து விளங்குவதைத் தொடர்வதன் மூலம், சுருக்கமான ஆனால் விரிவான முறையில் எங்களின் செயலாற்றுகை பற்றிய ஒரு நடுநிலையான மீளாய்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த அறிக்கை எங்கள் 2016/2017 ஆண்டறிக்கையின் அடியாக எழுந்தது என்பதுடன், நிதி மற்றும் நிலைத்தன்மை அறிக்கையிடலுக்காக எங்கள் வருடாந்த அறிக்கையிடல் சுழற்சியை ஒத்திருக்கிறது. புதிய பணி முறைகளுக்கு ஏற்ப தகவமைந்த விதம் மற்றும் எதிர்காலத்திற்கான எங்கள் திட்டங்கள் குறித்து அறிக்கை கவனம் செலுத்துகிறது.

இந்த அறிக்கையை எவ்வாறு வாசிப்பது

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளாக முன்வைக்கப்படுகிறது

பகுதி ஒன்று

தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் மீளாய்வைத் தொடரந்து RALL பற்றிய ஒரு கண்ணோட்டத்துடன் அறிக்கை ஆரம்பமாகிறது, "பெறுமதி உருவாக்கத்திற்கான நிலைப்பாடு" என்ற பிரிவு, சூழல், சமூக மற்றும் நிர்வாகக் கருப்பொருள்கள், எமது தாக்கங்கள் மற்றும் எமது பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றை அடையாளம் காணவும், முன்னுரிமைப்படுத்தவும், நிர்வகிக்கவும் பங்குதாரர்களை எவ்வாறு ஈடுபடுத்தியுள்ளோம் என்பதையும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால பங்குதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்குவதற்கு எங்களின் மூலோபாயம் எவ்வாறு உதவுகிறது என்பதையும் காட்டுகிறது. இது எங்கள் மூலோபாயத்தை செயற்படுத்துதல் மற்றும் பெறுபேறுகள் குறித்த நுண்ணோக்கு தொடர்பிலான இற்றறைப்படுத்தலை வழங்குகிறது. "செயற்பாட்டு மீளாய்வு" பிரிவு RALL இன் மூலோபாய திசைவழியில் வணிக அலகுகளின் பங்களிப்பை விவரிக்கிறது

பாகம் இரண்டு

நிதி அறிக்கைகள் மற்றும் துணை அறிக்கைகள் பிரிவுகள் 2018 மார்ச் 31இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான RALL இன் நிதி செயலாற்றுகையைக் காட்டும் குறிப்புகளுடனான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை உள்ளடக்குகிறது. மேலும் 2018 மார்ச் 31ஆந் திகதியன்று உள்ளவாறு துணைத் தகவல்களுடன் கூடிய நிதி நிலையையும் உள்ளடக்குகிறது.

வளங்கள்

இந்த நான்கு வகையான வளங்கள் போட்டி நன்மைகளை அடைய பயன்படுத்தப்படுகின்றன.

	***01. மனித மூலதனம் (மனித வளம்)***
	***02. நிதி மூலதனம்***
	***03. உற்பத்தி மூலதனம் (பொருள்)***
	***04. புலமை மூலதனம் (புலப்படாத வளம்)***

மூலோபாயம்

எங்கள் முக்கிய மூலோபாய நோக்கங்கள்:

- நிலையான வருமானத்தை உருவாக்கும் மாதிரியை உருவாக்குதல்
- திறன் விருத்தியில் கவனம் செலுத்துதல்
- சேவையின் தரத்தை உறுதிப்படுத்த வலுவான பொறிமுறையை உறுதிப்படுத்துதல்
- நிறுவனத்தின் சொத்துத் தளத்தை மேம்படுத்த முதலீடுகளை முகாமைத்துவம் செய்தல்
- நிறுவனத்தின் முக்கிய பெறுமானங்களைப் பாதுகாப்பதில் நிலையான அர்ப்பணிப்பு
- புதிய வர்த்தக அபிவிருத்திக்கான சாத்தியமான துறைகளை ஆராய்தல்

நோக்கமும் எல்லையும்

இந்த அறிக்கை RALL இன் செயற்பாடுகளை உள்ளடக்குகிறது. முக்கிய நிதி அம்சங்கள் RALL இன் சூழமைவில் கலந்துரையாடப்படுகின்றன, அதே நேரத்தில் நிதி அல்லாத அம்சங்கள் வேறுவிதமாகக் கூறப்பட்டாலேயன்றி RALL இன் சூழமைவில் கலந்துரையாடப்படும்.

RALL இன் 2018 ஆண்டறிக்கையின் நோக்கம் 2017 ஏப்ரல்1 முதல் 2018 மார்ச் 31 வரையான 12 மாத காலப்பகுதியை உள்ளடக்கியதாகும். மேலும் இது நிதி மற்றும் நிலைத்தன்மை அறிக்கையிடலுக்கான வருடாந்த அறிக்கையிடல் சுழற்சியை ஒத்திருக்கிறது.

மீளாய்வு ஆண்டில், முந்தைய அறிக்கையிடல் காலங்களிலிருந்து நோக்கம் மற்றும் அம்ச எல்லைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை, முந்தைய அறிக்கையிடல் ஆண்டில் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையுடன் ஒப்பிடும்போது மறு கூற்றுக்கள் எதுவும் இல்லை.

பொருண்மை

அறிக்கையில் வழங்கப்பட வேண்டிய உள்ளடக்கத்தை வரையறுக்க, பொருண்மை கொள்கையைப் பிரயோகித்துள்ளோம். அதன்படி, பங்காளரர்கள், வருங்கால முதலீட்டாளர்கள் மற்றும் எங்கள் முக்கிய பங்குதாரர்களுக்கு தொடர்ந்து பெறமதியை வழங்கும் ஒரு நிலையான வர்த்தகமாக இருப்பதற்கான அதன் திறன் மற்றும் RALL ன் மீதான பொருள் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் மற்றும் சவால்களை இந்த அறிக்கை பதிவு செய்கிறது.

அறிக்கையிடல் கட்டமைப்புகள்

இந்த அறிக்கையைத் தயாரிப்பதில், நாங்கள் பின்வருவனவற்றிலிருந்து கருத்துக்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்றோம் -

- இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவனம்
- 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
- 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 சுற்றறிக்கையின் கீழ் வெளியிடப்பட்ட "நல்லாட்சிக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டுதல்கள்" பற்றிய கையேடு.

முன்னெச்சரிக்கை கொள்கை

எமது சமூக மற்றும் சூழல் நிலைத்தன்மை குறித்து முன்னெச்சரிக்கை கொள்கையைப் பயன்படுத்துகிறோம். எங்கள் செயற்பாடுகள் சமூகம் மற்றும் சூழலில் பரஸ்பர தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஒரு சேவை வழங்குனராக, எங்களின் செயற்பாடுகள் நேரடியாக சமூகம் மற்றும் சூழலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும், அத்தகைய அபாயங்களைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

உறுதிப்பாடு

நிதி மற்றும் நிதி அல்லாத இந்த அறிக்கையில் உள்ள அனைத்து தகவல் மற்றும் தரவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை நாங்கள் மதிக்கிறோம். ஒருங்கிணைந்த உத்தரவாத மாதிரியை ஏற்றுக்கொள்வதன் மூலம், எங்கள் வர்த்தக நடவடிக்கைகளின் பல்வேறு அம்சங்களை மதிப்பீடு செய்து உத்தரவாதம் அளித்துள்ளோம்.

அம்சம்	உள்ளக உத்தரவாதம்	வெளி உத்தரவாதம்
நிதி அறிக்கை	பணிப்பாளர் சபை, உள்ளக கணக்காய்வு	கணக்காளர் நாயகம்
நிலைத்தன்மை குறிகாட்டிகள்	பணிப்பாளர் சபை, உள்ளக கணக்காய்வு, வர்த்தகத் தலைவர்கள்	கணக்காளர் நாயகம்
கூட்டுறவு ஆளுகை	பணிப்பாளர் சபை, உள்ளக கணக்காய்வு	கணக்காளர் நாயகம்
உள்ளகக் கட்டுப்பாடு	பணிப்பாளர் சபை, உள்ளக கணக்காய்வு	

உள்ளடக்கம்

பகுதி 01

- ரக்னா ஆரக்ஷன லங்கா பற்றி
  - 06/ ரக்னா ஆரக்ஷன லங்கா லிமிட்டட் பற்றி
  - 07/ தொலைநோக்கு, பணி மற்றும் பெறுமானங்கள்
  - 08/ எங்கள் பயணம்
- நிறைவேற்று மீளாய்வுகள்
  - 09/தலைவரின்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் வாழ்த்துச் செய்தி
- தலைமைத்துவம்
  - 10/ பணிப்பாரள் சபை
- பெறுமதி உருவாக்கம் மற்றும் வழங்கப்பட்ட பெறுமதிக்கான நிலைப்படுத்தல்
  - 12/ மனித மூலதனம்
  - 18/ நிதி மூலதனம்
  - 19/ உற்பத்தி மூலதனம்
  - 20/ புலமை மூலதனம்
- நிதி மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு
  - 23/ தரைப் பாதுகாப்பு
  - 24/ கடல் பாதுகாப்பு
  - 24/ CIMSTA
  - 25/ உணவு விநியோகம் மற்றும் உணவகம்

பகுதி 02

- நிதி அறிக்கைகள்
  - 27/ நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்கள் பொறுப்புகள்
  - 28/ நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை
  - 32/ இலாபம் அல்லது நட்டம் மற்றும் பிற விரிவான வருமான அறிக்கை
  - 33/நிதி நிலை அறிக்கை
  - 35/ வீதப்பங்கு மாற்றங்களின் அறிக்கை
  - 36/ பணப்பாய்ச்சல் அறிக்கை
  - 38/ நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

றக்னா ஆரக்ஷன லங்கா பற்றி

றக்னா **அரக்ஷகா லங்கா லிமிடெட்** *(நிறுவனப் பதிவு இல. PB 456 – N (PBS) 1370) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இல. 143/A கிருலப்பனை அவென்யூ, கொழும்பு-05 என்ற முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது. இது நாட்டையும் மக்களையும் காப்பதற்காக தமது இளவயது வாழ்க்கையை அர்ப்பணித்த முன்னாள் இராணுவத்தினருக்கும் பெண்களுக்கும் பல்வகையான தொழில் வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் தற்போதைய ஜனாதிபதி மேன்மைதங்கிய கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் நிறுவப்பட்டது.*

தனித்துவமான பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த ஒரு தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனமாக 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவரமைப்புகளை ஒழுங்கபடுத்தும் சட்டத்தின் கீழ் RALL பதிவு செய்யப்பட்டு அனுமதியைப் பெற்றது.

எங்கள் விதிவிலக்கான தரநிலைகள் மற்றும் எங்கள் தொழில் நெறிமுறைகள் மூலம், பின்வரும் கைத்தொழில் துறைகளில் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம்: கைத்தொழில்துறை பாதுகாப்பு, வர்த்தக பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் விசேட பயிற்சி.

றக்னா **ஆரக்ஷக லங்கா லிமிடெட் (RALL)** *2006 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சுடன் ஒரு அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு அமைப்பாக இணைக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ள 150 முக்கிய பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு 1025 க்கும் மேற்பட்ட உயர் தகுதி வாய்ந்த மற்றும் நன்கு பயிற்சி பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளுடன் உயர்தர வர்த்தக பாதுகாப்பு சேவையை வழங்குகிறது. மேலும் தனியார் கடல்சார் பாதுகாப்பு நிறுவனங்கள் (PMSCs) மற்றும் கப்பல்களுக்கு உயர்தர இராணுவ பின்னணியுடனான கடல் பாதுகாப்பினை வழங்க உறுதிபூண்டுள்ளது. சுமார் 476 பதிவு செய்யப்பட்ட கடல் பாதுகாப்பு அதிகாரிகளுடன் RALL ஆனது நம்பகத்தன்மை, தனிச்சிறப்பு, மரியாதை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றின் சின்னமாக திகழ்கிறது.*

CIMSTA ஆனது தனியார் பாதுகாப்பு தொழில்துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான தரநிலைகளை அமைப்பதற்கும், தேவையான அனைத்து உரிமங்களுக்கும் பொறுப்பேற்றுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் நேரடி வழிகாட்டுதலின் கீழ், CIMSTA ஆனது அனைத்து தனியார் பாதுகாப்பு தொடர்பான தொழில்முறை பயிற்சிகளையும் நடத்தும், மேலும் இலங்கை பாதுகாப்பு துறையில் பயிற்சித் தரநிலைகளை அமைக்கும்.

றக்னா உணவகங்கள் தரமான உணவு சேவையில் முன்னணியில் உள்ளன. நாங்கள் சமையல் சார்ந்த, நிலைத்தன்மை உணர்வுடன், உபசரிப்புத் துறையில் இடைவிடாமல் கவனம் செலுத்துகிறோம். எங்கள் ஆர்வமுள்ள சமையற்காரர்களால் உருவாக்கப்பட்ட சுவையான, மறக்கமுடியாத அனுபவங்கள், நாம் யார், நாம் என்னவாக இருக்க முயற்சி செய்கிறோம் என்பதை வரையறுக்கிறது. RALL ஆனது தலபத்பிட்டியவில் தியவன்னா ஏரிக்கு மேல் ஒரு உணவகத்தையும் கிம்புலாவல மற்றும் நவம் மாவத்தையில் இரண்டு உணவு விற்பனை நிலையங்களையும் நடத்துகிறது.

தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் பெறுமானங்கள்

தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

வர்த்தக மற்றும் கைத்தொழில்துறை துறைகளுக்கு சிறந்த தரமான பாதுகாப்பு சேவைகளை வழங்க நாங்கள் அர்ப்பணித்துள்ளோம். புதுமையான நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும், அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும், எங்கள் பணியாளர்கள் அவர்கள் செய்யும் செயல்களில் சிறந்தவர்களாக இருப்பதற்கு சிறப்பாக செயற்படுவதை உறுதிசெய்ய நாங்கள் முயற்சி செய்கிறோம். நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இலக்குகள்

- பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களில் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் பயங்கரவாதச் செயல்களால் பாதிக்கப்பட்ட முக்கியமான பகுதிகளில் ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸாரின் மிக முக்கியமான பணிகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிக சுதந்திரத்தை வழங்குதல்.
- தேசத்தின் அபிவிருத்தி செயன்முறைக்கு ஆதரவை வழங்குதல்.
- தேசிய அனர்த்த சந்தர்ப்பங்களில் உதவி வழங்குதல்.
- வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கத்திற்கு உதவி வழங்குதல்.
- புதிய வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க பாரம்பரிய "நில சேவைகளை" விரிவுபடுத்துவதன் மூலம்.
- ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் சேவையின் எதிர்கால நலன்பேணல் நோக்கங்களை நோக்கிய அவர்களின் முன்னாள் படைவீரர்கள் மற்றும் ஓய்வுபெற்ற மற்றும் அணிதிரட்டப்பட்ட பெண்களுக்கான உதவி. முன்னாள் இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் பொது மக்களுக்கும் வாய்ப்புகளை வழங்க பாதுகாப்புச் சேவைகளைத் தாண்டிச் செல்வது, "ஆயுதப் படை அதிகாரிகளுக்கு" மிகவும் பொருத்தமானது.
- சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு ஆதரவை உறுதி செய்வதில் "பாதுகாப்பு சேவைகளில்" ஈடுபட்டுள்ள ஆண் மற்றும் பெண் பணியாளர்களின் தரத்தை மேம்படுத்துவதில் உதவி வழங்குதல்.
- RALL ஊழியர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தங்கள் பணியாளர்களைப் பயிற்றுவிக்க விரும்பும் ஏனையவர்களுக்கும் சேவைப் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

எங்கள் பெறுமானங்கள்

RALL என்பது ஒரு முழுமையான இலங்கை நிறுவனமாகும், இது தொழில்துறையின் ஒழுக்கம் மற்றும் ஒருமைப்பாட்டின் பெறுமானங்களை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. மக்களிடையே நேர்மறையான அணுகுமுறையை உருவாக்குவது மற்றும் அவர்கள் வாழ்வதற்கான சிறந்த சூழலை உருவாக்குவது RALL க்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, இது ஒரு தனிநபரின் நேர்மறையான மாற்றம் சிறந்த குடும்ப வாழ்க்கைக்கும் இறுதியில் சிறந்த சமூகத்திற்கும் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையைப் போற்றுகிறது.

எங்கள் பயணம்



தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் வாழ்த்துச் செய்தி

றக்னா ஆரக்ஷக லங்கா லிமிடெட்டின் பத்தாவது வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு உங்களை வரவேற்பதில் பணிப்பாளர் சபையின் சார்பாக மகிழ்ச்சியடைவதோடு, 2018 மார்ச்31இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை கூற்றுக்களை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நிறுவனம் ரூ. 632 மில்லியன் தொகையை வருமானமாக அடைந்துள்ளது , இது முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 31% குறைந்துள்ளது. இது முக்கியமாக நிறுவனத்தின் செயற்பாட்டை மூடுவதற்காக தொடங்கப்பட்ட பொறுப்பு செயன்முறை மற்றும் வருமானத்தை அதிகரிக்க நிறுவனம் எந்த புதிய வர்த்தகத்தையும் உருவாக்கவில்லை.

பொறுப்பு செயன்முறையின் காரணமாக 2017/18 நிதியாண்டிலிருந்து நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் புதிய நிர்வாகக் குழு மற்றும் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பிறகு, முந்தைய நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வுகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக, நான் பணிப்பாளர்கள் சபையை சமாதானப்படுத்தி, முந்தைய பணிப்பாளர்கள் சபையின் சார்பாக முந்தைய ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தேன்.

கோவிட்-19 தொற்றுநோயின் பலவிதமான சவால்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் பெரும்பாலான வர்த்தகத் துறைகள் எதிர்கொண்ட பல்வேறு பாதிப்புகளுக்கு மத்தியிலும் எங்கள் பாதுகாப்புக் காவலர்களால் எங்கள் வாடிக்கையாளர் தளத்திற்கு தடையில்லா சேவையை எளிதாக்க முடிந்தது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நிதி மீளாய்வு

2018 மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது , நிறுவனம் மீளாய்வாண்டில் ரூ. 632 மில்லியன் வருமானத்தையும் 24 மில்லியன் நிகர இலாபத்தையம் பதிவுசெய்துள்ளது. நிகர இலாபம் குறைந்ததற்கு முக்கியக் காரணம் கடந்த ஆண்டுடன் (2018 - 632 மில். / 2017 - 922 மில்.) ஒப்பிடும்போது குறைந்த வருமானம் மற்றும் அவன்ட் கார்ட் மெரிடைம் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்டுக்கு நிறுவனத்தால் செய்யப்பட்ட ரூ. 87 மில்லியன் கிடைப்பனவான மீதியாகும்.

முடிவுரை

சபையின் சார்பாக, இந்த நிறுவனத்தின் மீது தொடர்ந்து நம்பிக்கையும் விசுவாசமும் வைத்துள்ள எங்கள் மதிப்புமிக்க பங்குதாரர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன், மேலும் பணிப்பாளர்கள் சபையின் தொடர்ச்சியான ஆதரவு, ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்காக எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

பணிப்பாளர்கள் சபை

2017/2018 நிதி அறிக்கையிடல் காலம்	
நாலக்க களுவெவ - தலைவர்	*2017 ஜனவரி18 முதல் 2019 டிசம்பர் 02வரை*
பணிப்பாளர்கள்	
ஆர்.பி. ராஜபக்ஷ	*2017 ஜனவரி 05 முதல் 2019 ஜனவரி 16வரை*
பீ.ஏ.ரீ. ரொட்ரிகோ	*2015 மே 05 முதல் 2020 ஜனவரி 17வரை*

2017/18 ஆண்டறிக்கை இறுதி செய்யப்பட்டது	
மேஜர் துலத் எல். விஜேதிலக (ஓய்வுபெற்ற) - தலைவர்	*2020 மே19*
பணிப்பாளர்கள்	
மேஜர் ஜெனரல் கே. ஜகத் அல்விஸ் (ஓய்வு) RWP RSP VSV USP	*2020 செப்டம்பர் 25*
டி.எம்.எஸ். திஸாநாயக	*2022 பெப்ரவரி 11*
பி.எச்.ஏ.எஸ். விஜேரத்ன	*2022 பெப்ரவரி 28*

பெறுமதி உருவாக்கம் மற்றும் வழங்கப்பட்ட பெறுமதிக்கான நிலைப்படுத்தல்

செயற்பாட்டு சூழல் மற்றும் அதன் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று, பெறுமானங்கள் மற்றும் மூலோபாயத்தால் வழிநடத்தப்படும் RALL இன் பெறுமானம் உருவாக்கும் செயன்முறை பற்றிய விரிவான கலந்துரையாடல். பங்குதாரர் ஈடுபாடு செயன்முறை, மூலோபாய திசைவழி மற்றும் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றால் பங்களிக்கப்பட்ட பொருண்மை அடையாள செயன்முறையை இந்த பிரிவு கோடிட்டுக் காட்டுகிறது.

எங்கள் பெறுமதி உருவாக்க மாதிரி

எங்களின் பங்குதாரர்களுக்கான பெறுமானத்தை உருவாக்க, எமது வளங்கள், திறன்கள் மற்றும் இடைவினைகளை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை எங்கள் பெறுமதி உருவாக்க மாதிரி காட்டுகிறது. எங்களின் நீண்டகால வெற்றியும் நிலைத்தன்மையும் எமது பங்குதாரர்களுக்கு பெறுமதியை எவ்வாறு உருவாக்குகிறோம் மற்றும் வழங்குகிறோம் என்பதைப் பொறுத்து இது மிகவும் அவசியம். எங்கள் வர்த்தக நடவடிக்கைகள் மூலம், நிதி, மனித, உற்பத்தி மற்றும் அறிவுசார் மூலதனங்கள் போன்ற உள்ளீடுகள் வெளியீடுகளாக மாற்றப்படுகின்றன.



மனித மூலதனம் (மனித வளம்)

மனித மூலதனம் எமது நிறுவனத்தின் மிகப் பெறுமதியான ஆதனமாகும். மிகவும் திறமையான மற்றும் ஈடுபாடுள்ள பணியாளர்களை போசிப்பது, எங்கள் நிறுவன நோக்கங்களை திறம்பட சாதித்து, எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் பெறுமதியை உருவாக்குகிறது.

இதில் என்ன அடங்கும்

எமது மனித மூலதனம் என்பது எங்கள் ஊழியர்களின் அனுபவம், திறன்கள், நல்வாழ்வு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் பெறுமதியைக் குறிக்கிறது

உள்ளீடுகள்

- பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- நேர்மறையான வேலைச் சூழல்
- உறுதியான தொழிலாளர் உறவுகளை நிறுவுதல்
- முக்கியமான திறன்கள் மற்றும் தொடர் திட்டமிடல் ஆகியவற்றை உருவாக்குதல்
- சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான செயலாற்றுகை மற்றும் திறன் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

அது எவ்வாறு பெறுமதியை சேர்க்கிறது

மிகவும் திறமையான மற்றும் ஈடுபாடுள்ள ஊழியர்கள், எங்கள் வாடிக்கையாளர்களைப் புரிந்துகொண்டு சேவை செய்யும் திறனை மேம்படுத்தி, எங்கள் வணிகச் செயலாற்றுகையை வெற்றிகரமாக இயக்குகிறார்கள். கூட்டுறவு நோக்கங்களை அடைவதற்கும் எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் பெறுமதியை உருவாக்குவதற்கும் எங்கள் மூலோபாயங்களை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு அவை உதவுகின்றன. விரைவான மற்றும் எதிர்பாராத அபிவிருத்திகள் நிகழும் ஆற்றல்மிக்க மற்றும் எதிர்வுகூற முடியாத சூழலில் அவை பெறுமதி உருவாக்கத்தை எளிதாக்குகின்றன.

எங்கள் அணுகுமுறை

ஒவ்வொரு பணியாளரும் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளுடன் பாதுகாப்பான பணிச்சூழலுக்கான அணுகலைக் கொண்ட ஒரு உள்ளடக்கிய பணி கலாச்சாரத்தை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். பணியாளர் ஈடுபாடு, வர்த்தக செயலாற்றுகை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் திறன் ஆகியவற்றுக்கு இடையே நேரடி தொடர்பு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். எனவே, RALL இல் அவர்களின் வாழ்க்கை முழுவதும் நேர்மறையான ஊழியர் அனுபவத்திற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

நாங்கள் எங்கள் ஊழியர்களுடன் நியாயமான முறையில் ஈடுபடுகிறோம், அவர்கள் தங்கள் பாத்திரங்களைச் செய்வதற்கு பொருத்தமான அறிவு, பயிற்சி மற்றும் திறன்களைக் கொண்டிருப்பதை உறுதிசெய்கிறோம்.

ஒரு பொறுப்பான தொழில் வழங்குனராக, நாங்கள் எங்கள் ஊழியர்களின் உருவாக்கத்தில் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கிறோம், நல்ல ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்கும் பணிச்சூழலை வழங்குகிறோம். பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரத்தை ஊக்குவிப்பதன் மூலம், அணிகளின் செயல்திறனையும் புதுமைகளை உருவாக்கும் திறனையும் மேம்படுத்தியுள்ளோம். இது எங்கள் மக்கள் செயற்படுவதற்கு உதவுவதற்காக நாங்கள் அமைக்கும் எங்கள் பெறுமானங்கள் தரநிலைகள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றில் உட்பொதிக்கப்பட்டுள்ளன.


மனித மூலதனத்தின் பெறுமதியை உயர்த்துவதற்கான மூலோபாயங்கள்

- தெரிவு மற்றும் உள்ளக செயன்முறைகளில் தொழில்முறை அபிவிருத்தி மற்றும் தகுதி அடிப்படையிலான அளவுகோல்களை ஊக்குவித்தல்
- அவர்களின் வளர்ச்சியை முதலீடு செய்வதன் மூலமும், தொழில் வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் ஊழியர்களை வலுவூட்டுதல்
- ஊழியர்களுக்கு பலவிதமான சுகாதார மற்றும் ஆரோக்கிய முன்முயற்சிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்
- நேரம் மற்றும் வளங்களை திறம்பட பயன்படுத்த மனிதவள செயன்முறைகள் மற்றும் ஆவணப்படுத்தலை மேம்படுத்துதல்
- ஆரோக்கியமான வேலை-வாழ்க்கை சமநிலையை ஆதரிப்பதன் மூலம் பணியாளர் அனுபவத்தையும் விசுவாசத்தையும் மேம்படுத்தல்
- வேகமாக வளர்ந்து வரும் சூழலில் தொடர்புடையவர்களாக இருக்க நமது மக்களை சுறுசுறுப்பாகவும், தகவமைத்துக் கொள்ளவும் உதவுதல்

ஊழியர் குழாமின் பலம்

RALL இன் முக்கிய பலம் அதன் ஊழியர்கள். 2018 மார்ச் 31மற்றும் 2019 இல் உள்ளவாறான RALL இல் பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

பிரிவுகள்	***2018 மார்ச் 31 இல் உள்ளவாறு***
தரைத் தொழிற்பாடுகள்	
பாதுகாப்பு ஊழியர்கள்	955
கடல்வழித் தொழிற்பாடுகள்	
சீ மார்ஷல்கள்	460
ஆயுத் தொழில்நுட்பவியலாளர்கள்	4
CIMSTA	
நிர்வாக ஊழியர்கள்	4
உணவகம் மற்றும் கேட்டரிங் ஊழியர்கள்	
சமையல் ஊழியர்கள்	11
நிர்வாக ஊழியர்கள்	45
தொழிற்பாட்டு ஊழியர்கள்	22
நிதி ஊழியர்கள்	15
மொத்தம்	***1516***



ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு

ஆயுதப் படைகளில் இருந்து ஓய்வு பெறும் சுமார் 1,000 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு வர்த்தக துறைகளுக்காக RALL க்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறார்கள். அதிக வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, சேவையின் தரத்தை விட்டுக்கொடுக்காமல் எதிர்பார்க்கும் தகுதியை பூர்த்தி செய்யும் சிவில்

ஆண்களையும் பெண்களையும் பணியமர்த்த நிறுவனம் முடிவெடுக்கிறது. ஆட்சேர்ப்பு பின்வரும் வகைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது,

தரைத் தொழிற்பாடுகள்	கடல்சார் தொழிற்பாடுகள்
➢ வருகைதரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ➢ பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ➢ பொறுப்பதிகாரி ➢ சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ➢ கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ➢ மகளிர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்	➢ அணித்த தலைவர்கள் ➢ சீ மார்ஷல்கள் ➢ பயிலுநர் சீ மார்ஷல்கள்
உணவகங்கள் மற்றும் சமையல் சேவை	நிர்வாக ஊழியர்கள்
➢ உணவக முகாமையாளர்கள் ➢ பிரதான செஃப் ➢ சமையல் மேற்பார்வையாளர்கள் ➢ செஃப் ➢ சமையல்காரர் ➢ பரிமாறுவோர்	➢ உயர் மட்ட முகாமையாளர்கள் ➢ நடுத்தர முகாமையாளர்கள் ➢ முதன்மை நிலை முகாமையாளர்கள் ➢ தொழிற்பாடு மட்ட முகாமையாளர்கள் ➢ ஆரம்ப நிலை ஊழியர்கள்

- விண்ணப்பங்கள் பொதுச் செய்திப் பத்திரிகை அறிவிப்பு அல்லது பொது மற்றும் இணையத்தள அறிவிப்புகள் அல்லது சமூக ஊடக அறிவிப்புகள் மூலம் கோரப்படும். செயற்கை நுண்ணறிவு, நிகழ்நிலை யதார்த்தம் போன்ற புதிய தொழில்நுட்பங்களை ஆட்சேர்ப்புகளுக்குப் பயன்படுத்தி திறமையாளர்களை ஈர்க்கவும், ஆட்சேர்ப்பு செயன்முறையை மிகவும் திறமையாகவும், திறம்படவும், தன்னியக்கமாகவும் மாற்றுவதற்கு நிறுவனத் தேவைகளுக்கு ஏற்ற திறமையான நபரைத் தேர்ந்தெடுக்க *RALL* இல் திட்டமிடப்பட்டுள்ளது.

- *RALL* இன் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர். ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு ஒப்பந்தம் நீடிக்கப்படும்.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்த பின்னர், பணியாளர்களுக்கு திறன் விருத்தி, பணி நெறிமுறைகள், நேர்மறை மனப்பான்மை மற்றும் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஏழு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. *RALL* ஊழியர்களால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை தொடர்ச்சியாக பேணி வருவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. புத்துணர்ச்சி பாடநெறிகள், ஒரு நாள் பயிற்சித் திட்டங்கள், பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் அவ்வப்போது கூட்டங்கள் ஆகியவை அதன் ஊழியர்களின் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக நடத்தப்படுகின்றன.

செயலாற்றுகை மதிப்பீடு

பணியாளரின் செயலாற்றுகை ஆண்டுதோறும் பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தால் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட செயலாற்றுகை அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் மற்றும் பணிப்பாளர்கள் சபையின் பெரும்பான்மையானவர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட முடிவு இது தொடர்பாக உங்களைக் கட்டுப்படுத்தும். உங்கள் பங்கைப் பற்றி உங்களுக்கு கரிசனைக்குரிய விடயங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை சபையின் தலைவர்/நேரடி கண்காணிப்பாளருடன் பொருத்தமான விரைவில் கலந்துரையாட வேண்டும்.

ஒழுக்காற்று நடைமுறைகள்

பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு எதிராக செய்யப்படும் எந்தவொரு முறைப்பாட்டையும் விசாரிப்பதற்காக ஒழுக்காற்றுக் குழுவினால் சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும். ஒழுக்காற்றுக் குழுக்களின் தீர்மானம் மேலதிக நடவடிக்கைக்காக தலைவருக்கு/தலைமை நிர்வாக அதிகாரிக்கு அனுப்பப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள நன்கு கட்டமைக்கப்பட்ட செயன்முறை மற்றும் பொறிமுறையானது *RALL* ஊழியர்களின் தரத்தை மிக உயர்ந்த தொழில் தரத்திற்கு உறுதி செய்கிறது.

ஒத்திசைவு

RALL இல் பணிபுரியும் ஒவ்வொரு பாதுகாப்பு அதிகாரியும் குறிப்பிட்ட சீருடையை அணிய வேண்டும்



JSO



LSO



LSO/GRO



VSO




OIC



துறை

முகாமை

Proposed Organization Structure of Raksha Arakshaka Lanka Ltd





நிதி மூலதனம்

நிதி மூலதனம் பங்குதாரர்களுக்கான பெறுமதியை உருவாக்க RALL பயன்படுத்தும் நாணயச் சொத்துக்களை உள்ளடக்கியது. RALL இன் நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக நிதி மூலதனத்தின் மதிப்பை அதிகரிக்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.

உள்ளடங்கும் விடயங்கள்

எங்களின் நிதி மூலதனத்தில் பொது திறைசேரியால் அளிக்கப்படும் மற்றும் எங்கள் வணிக நடவடிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட பண வளங்கள் அடங்கும்.

உள்ளீடுகள்

- பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்
- கடன் வாங்குதல்

பெறுமதி சேர்க்கும் முறை

எங்கள் நிதிரீதியான பேண்தகுதன்மை என்பது எங்களின் சொந்த மற்றும் கடன் வாங்கப்பட்ட நிதிகளின் கிடைக்கும் தன்மை மற்றும் முகாமையில் தங்கியுள்ளது. நிதி மூலதனம் மற்ற எல்லா மூலதனங்களுடனும் சேர்ந்து பெறுமதி உருவாக்கத்தைச் சாத்தியப்படுத்துகின்றது. பங்கு மூலதனம், இருப்புக்கள் மற்றும் கடன்கள் போன்ற மூலதன உள்ளீடுகளின் ஒருங்கிணைந்த பயன்பாட்டின் மூலம், நாங்கள் எங்கள் திட்டங்கள், துணை நிறுவனங்கள், உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்களை உருவாக்குதல், பயிற்சியின் மூலம் எங்கள் மக்களின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் சேவைகளில் புதுமைகளை உருவாக்குதல் என்பவற்றுக்கு நிதி அளிக்கிறோம்.

எங்கள் அணுகுமுறை

- வருமான வழிகளை பல்வகைப்படுத்துதல்
- கடுமையான செலவு முகாமைத்துவம் மற்றும் செலவு மேம்படுத்தல்
- செலவு குறைந்த கட்டமைக்கப்பட்ட நிதியிடலைப் பேணுதல்

நிதி மூலதனத்தின் பெறுமதியை மேம்படுத்துவதற்கான உபாயங்கள்

- மூலோபாய முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்ட நிதியிடல் மூலோபாயம்
- சமூக மற்றும் சூழல் அம்சங்களைக் கருத்திற்கொண்ட வகையில் சிறந்த நிதி முடிவுகளை அளிக்கக்கூடிய மூலதன முதலீடுகள்
- நிதி ஸ்திரத்தன்மை மற்றும் பலத்தைத் தொடர்தல்



உற்பத்தி மூலதனம் (பொருள்)

RALL இன் பௌதீக மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பை உள்ளடக்கிய உற்பத்தி மூலதனம் ஒரு

முக்கியமான பெறுமதி இயக்கி. உயர்தர சொத்துத் தளத்தை உருவாக்க நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்

இது ஒரு தனித்துவமான போட்டித்தன்மையை வழங்குகிறது.

உள்ளடங்கும் விடயங்கள்

RALL இன் உற்பத்தி செய்யப்பட்ட மூலதனமானது, வாடிக்கையாளர்களைச் சென்றடையவும், செயற்பாட்டுச் சிறப்பை அடையவும் உதவும் பௌதீக மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இது, பிராந்திய வலையமைப்பு உட்பட சொத்து, ஆலை, உபகரணங்கள், ஆயுதம் மற்றும் வெடிமருந்துகள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

RALL கொள்முதல் மற்றும் ஏற்பாட்டியலில் ஒரு வெளிப்படையான நடைமுறையைப் பின்பற்றுகிறது. முக்கிய பொருட்களை கொள்முதல் செய்வது அரச கொள்முதல் வழிகாட்டுதல் 2006 பொருட்கள் மற்றும் பணிகள், அரச கொள்முதல் கையேடு 2006 பொருட்கள் மற்றும் பணிகள் 2006 மற்றும் அதன் துணைப் பகுதிகள் ஆகியவற்றின்படி கொள்முதல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.



புலமை மூலதனம் (புலப்படா வளங்கள்)

புலப்படாச் சொத்துக்களை உள்ளடக்கிய புலமை மூலதனம் போட்டித்தன்மையான நன்மைக்கான முக்கிய ஆதாரமாகும். புலமை மூலதனத்தின் பெறுமதியை அதிகரிப்பது நீண்ட காலத்திற்கு உயர் மதிப்பை அடைய உதவுகிறது.

உள்ளடங்கும் விடயங்கள்

புலமை மூலதனம் என்பது எமது மறைமுக அறிவு, வாடிக்கையாளர் விசுவாசம், சின்னம் மற்றும் நற்பெயர், உள்ளக முறைமைகள் மற்றும் கூட்டுறவு பெறுமானங்கள், கொள்கைகள் மற்றும் எங்கள் பங்குதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்குவதற்கு அவசியமான எங்கள் நிறுவன கலாச்சாரம் உள்ளிட்ட புலப்படாச் சொத்துக்களை உள்ளடக்கிய அனைத்து மூலதனங்களின் உச்சநிலை.

உள்ளீடுகள்

- *கற்றல் மற்றும் அபிவிருத்தி*
- *கொள்கைகள், சட்டகங்கள் மற்றும் செயன்முறைகள்*
- *நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்*
- *நிறுவனக் கலாசாரம்*


- பொறுப்புணர்வுமிக்க தலைமைத்துவம்
- கடல் பாதுகாப்பு அதிகாரிகளின் ஈடுபாட்டிற்கு பாதுகாப்பு அமைச்சின் மூலம் அனுமதி வழங்குவதற்கான ஏக அதிகாரம்
- தனியார் கடல்சார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் சொந்த ஆயுதங்களை வழங்கக்கூடிய ஒரே இலங்கை அமைப்பு *RALL* ஆகும்
- பாதுகாப்பு அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது

பெறுமதி சேர்க்கும் முறை

- புலமை மூலதனம் என்பது போட்டித்தன்மையான நன்மைக்கான ஒரு முக்கிய ஆதாரம் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம், இது குறுகிய கால மற்றும் நீண்ட காலத்தில் *RALL* க்கான பெறுமதியை உருவாக்கும். இது போட்டித்தன்மையான நன்மை மற்றும் எதிர்கால செல்வத்தை உருவாக்குவதற்கான முடிவுகளின் ஒரு மூலமாக இருக்கும் புத்தாக்கத்தைத் தூண்டுகிறது

எங்கள் அணுகுமுறை

வலுவான செயல்முறை ஓட்டங்கள், பிற நிறுவனங்களுடனான கூட்டாண்மை மற்றும் கற்றல் மற்றும் புதுமைக்கான ஊக்கம் ஆகியவற்றின் மூலம் எமது புலமை மூலதனத்தை மேம்படுத்துகிறோம். சூழல் தாக்கம் மற்றும் இயக்கச் செலவுகளைக் குறைக்கும் அதே வேளையில், புதிய தயாரிப்புகளின் மேம்பாடு, எங்களின் கூட்டுறவு பிரதிமை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மேம்படுத்துவதன் மூலம் மிகவும் வினைத்திறனாக இருக்க உதவும் முறைமைகள் மற்றும் செயன்முறைகளின் மேம்பாடு மூலம் எங்கள் புலமை மூலதனத்தை வளர்க்கிறோம்.



நிதி மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

23/ தரைப் பாதுகாப்பு

24/ கடல்வழிப் பாதுகாப்பு

24 / CIMSTA

25 / கேட்டரிங் சேவை மற்றும் உணவகம்



தரைத் தொழிற்பாடுகள்

RALL இன் தரைச் செயற்பாடுகள் பாதுகாப்புப் பிரிவு 2007 ஆம் ஆண்டு நிறுவனத்தின் பிரதான செயற்பாடாக நிறுவப்பட்டது, அதன் தலைமை அலுவலகம் இல 143/A, கிருலப்பனை அவென்யூ, கொழும்பு 05 இல் உள்ளது. . இன்று நிறுவனம் தனது செயற்பாடுகளை ஐந்து பிராந்திய கிளை அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது. கண்டி, காலி, இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள இவை அனைத்து மாகாணங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குகின்றன.

RALL 2007 இல் 77 பாதுகாப்புப் பணியாளர்களுடன் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது, மேலும் 2018 மார்ச் 31 ஆம் திகதி உள்ளவாறு , அதன் தொடக்கத்திலிருந்து 1025 பாதுகாப்புப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர், உயர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பொது நிறுவனங்களுக்கு RALL பாதுகாப்பை வழங்கியுள்ளது. 2008 இல், முதல் நிதியாண்டின் முடிவில், அதன் வாடிக்கையாளர் தளத்தின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது. இது 2018 மார்ச் 31 க்குள் ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு, மேல்மாகாண அரச வைத்தியசாலை, MILCO நிறுவனம், இலங்கை வங்கி, HDFC, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் போன்ற முக்கிய வர்த்தக மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட சுமார்150 வாடிக்கையாளர்களாக அதிகரித்துள்ளது. RALL இன் வருமானத்தில் 50% க்கும் அதிகமானவை அதன் முதல் பத்து வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

RALL இன் தரைத் தொழிற்பாடுகள் பாதுகாப்பு பிரிவு, தொழில்துறையின் மிக உயர்ந்த தரமான தொழில்முறைக்கான அர்ப்பணிப்புடன் சந்தைத் தலைவராக மாறியுள்ளது. இந்த நிறுவனம் இத் தொழில்துறையில் முக்கிய சந்தை இடத்தை அமைத்துள்ளதுடன், ஏனைய சேவை வழங்குநர்கள் அதன் சேவைகளின் தரத்துடன் பொருத்திப்பார்த்து RALL உடன் போட்டியிடும் வகையில் தங்கள் தரத்தை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதன் விளைவாக, RALL இன் பாதுகாப்புச் சேவைகளால் நிரூபிக்கப்பட்ட தரத்தின் உயர் தரத்தின் காரணமாக முழு பாதுகாப்பு சேவைத் துறையும் பயனடைந்து மேம்பட்டுள்ளது.

2017/18 இல் செயற்பாடு

தரைத் தொழிற்பாடுகள் பாதுகாப்பு பிரிவு ரூ. 399,804,712 ரூபாவை 2017/2018 நிதியாண்டிற்கான வருவாயாக அறிக்கையிட்டுள்ளது இந்த சேவைப் பிரிவு 2017/2018 இல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாயில் 62% ஆக இருந்தது.



கடல்வழித் தொழிற்பாடுகள்

கடல்சார் பாதுகாப்புப் பிரிவு அடையாளம் காணப்பட்ட கடல் எல்லைகளில் இயங்கும் வணிகக் கப்பல்கள் மற்றும் மீன்பிடிக் கப்பல்களுக்கு உயர்தர பாதுகாப்பை வழங்கும் நோக்கத்துடன் 2011 ஜனவரி17ஆம் திகதி நிறுவப்பட்டது . 476 உயர் பயிற்சி பெற்ற கடல் மார்ஷல்களைக் கொண்டுள்ள இந்தத் துறை RALL விடயத்துறைக்கு பலம் சேர்ப்பதாகும். சேவை அலுவலகம் தலைமையக கட்டிடம் மற்றும் ஒன்றில் அமைந்துள்ளது சிறப்பு கடல்சார் அலுவலகம் காலியில் அமைந்துள்ளது.

2017/18 இல் செயற்பாடு

கடல்சார் பாதுகாப்புப் பிரிவு ரூ. 24,22,22,928 ரூபாவை 2017/2018 நிதியாண்டிற்கான வருவாயாக அறிக்கையிட்டுள்ளது இந்த சேவைப் பிரிவு 2017/2018 இல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாயில் 38% ஆகும்.



CIMSTA

வர்த்தக தொழில்துறை கடல்சார் பாதுகாப்பு பயிற்சி நிறுவனம் (CIMSTA) இன் கீழ், RALL 2012 இல் நடுங்கொல்ல, மண்டலாவில் ஒரு பயிற்சிப் பாடசாலையை "றக்னா பாதுகாப்பு தீயணைப்பு மற்றும் அவசரகால பதிலளிப்பு பயிற்சிப் பாடசாலை" என்ற பெயரில் நிறுவியது, லங்கா வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, "தீ மற்றும் அவசரகால பதிலளிப்பு பயிற்சிப் பாடசாலை" பற்றிய கருத்து 2011 இல் உருவானது. அதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் அத்தகைய நெருக்கடியை நிர்வகிப்பதற்கான தீ ஆயத்த பயிற்சியின் பற்றாக்குறையை அடையாளம் கண்டது. இவ்வாறு, கூறப்பட்ட தேவையை பூர்த்தி செய்வதற்கான ஒரு படியாக, தீயணைப்பு மற்றும் அவசரகால பதிலளிப்பு பயிற்சிப் பாடசாலை (CIMSTA) நிறுவுவதற்கு RALLக்கு அறிவுறுத்தப்பட்டது.



ரக்னா உணவகம் மற்றும் கேட்டரிங் சேவை

கூட்டுறவு சமூகப் பொறுப்பிற்கு (CSR) RALL அதிக முன்னுரிமை அளிக்கிறது. ஜூலை 2012 இல், போசனை மற்றும் தரமான உணவை மலிவு விலையில் வழங்கும் நோக்கத்துடன் ஒரு CSR முயற்சியாக RALL ஒரு கேட்டரிங் சேவையை நிறுவியது. தற்போது RALL தலபத்பிட்டியவில் ஒரு உணவகத்தையும் கிம்புலாவல மற்றும் நவம் மாவத்தையில் இரண்டு உணவு விற்பனை நிலையங்களையும் செயற்படுத்துகிறது.

உள்ளடக்கம்

02

நிதி அறிக்கைகள்

- *27/ நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள்*
- *28/ நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை*
- *32/ இலாபம் அல்லது நட்டம் மற்றும் பிற விரிவான வருமான அறிக்கை*
- *33/ நிதி நிலை அறிக்கை*
- *35/ வீதப் பங்கு மாற்றங்களின் அறிக்கை - RALL*
- *36/ பணப்பாய்ச்சல் அறிக்கை*
- *38/ நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்*

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள்

RALL இன் பணிப்பாளர்கள் சபை நிறுவனம் அனைத்து பரிவர்த்தனைகளின் சரியான கணக்குப் பதிவுகளை வைத்திருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், நிதி அறிக்கைகளைத் தயாரிக்கிறது, இது விவகாரங்களின் நிலை மற்றும் ஆண்டுக்கான இலாபம்/நட்டம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கிறது. அதன்படி, பணிப்பாளர்கள் சபையானது நிதி அறிக்கையிடலுக்கான நிர்வாகங்களின் பொறுப்புகளை அவர்களின் வழக்கமான கூட்ட மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வுக் குழு மூலம் மேற்பார்வையிடுகிறது. பணிப்பாளர்கள் சபையானது பயனுள்ள மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை நிறுவியுள்ளது. இது உள்ளகக் காசோலைகள், உள்ளகக் கணக்காய்வு மற்றும் வணிகத்தை ஒழுங்காக நடத்துவதற்கும், அதன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் பதிவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நிதி மற்றும் பிற கட்டுப்பாடுகளின் முழு அமைப்புகளையும் உள்ளடக்கியது. பணிப்பாளர்கள், பக்கங்கள் 32 முதல் 54 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ள 2017/2018 ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் தாங்கள் ஒரு நிலையான அடிப்படையில் பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதாகவும், நியாயமான மற்றும் விவேகமான தீர்ப்பு மற்றும் மதிப்பீடுகள் மூலம் ஆதரிக்கப்படுவதாகவும் கருதுகின்றனர். பணிப்பாளர்கள் சபை விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்குமுறைகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன் இணங்குவதை உறுதிசெய்கிறது. 2018 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான RALL இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இந்த அறிக்கையில் வழங்கப்பட்டிருப்பவை இலங்கை கணக்கியல் தரநிலைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் மற்றும் அதன் தருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்குகின்றன.

……

சபையின் செயலாளர்



தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல: டிஈஎஃப்/பீ/ஆர்எஎல்எல் /2019/01 உமது இல. *திகதி: 2021 தொலைபேசி 09*

பங்குரிமையாளர்களுக்கு,
வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி

<u>வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை</u>

வரையறுக்கப்பட்ட றக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளிட்ட 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரைக்கு இணங்க எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணக்கமான முறையில் தயாரிக்கப்படுவதையும் நியாயமான முறையில் சமர்ப்பிப்பதையும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாகக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதையும் சாத்தியப்படுத்துவதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

கணக்காய்வாளரின் பொறுப்பு

கணக்காய்வுத் தரநியமங்களுக்கு இணக்கமான முறையில் மேற்கொள்ளப்படும் கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பது எனது பொறுப்பாகும்.

கருத்துக்களுக்கான அடிப்படை

அ) கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கிடைக்க வேண்டிய வியாபார மீதிகளான ரூபா 1,746,485,473 வரையறுக்கப்பட்ட அவண்ட் கார் மெரிட்டைம் (தனியார்) கம்பனியிடமிருந்து 2012 முதல் 2018 வரை கிடைக்க வேண்டிய ரூபா 1,428,866,986 கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் 03 வருடங்களாக கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மீதிகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 2,182,942,702 ஆன வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகள் வரையறுக்கப்பட்ட அவண்ட் கார் மெரிட்டைம் (தனியார்)

கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதியான ரூபா 1,890,499,614 ஆகக் காணப்பட்டதுடன் அது தேறிய சொத்துக்களில் 57 ஆகக் காணப்பட்டது.

கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி 2018 மார்ச் 31 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 523,781,502 ஆன ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகள், காலி மிதக்கும் ஆயுதக் கிடங்குச் செயற்திட்டம் (Galle Floating Armory – Joint Venture) மற்றும் ரங்கலை ஆயுதங்களை விமான மூலம் கொண்டு செயற்திட்டம் (Rangala weapon Air Transport andTraining project) என்பவற்றுக்காக வரையறுக்கப்பட்ட அவண்ட் கார் மெரிட்டைம் (தனியார்) கம்பனியிடமிருந்து 2012 முதல் 2018 வரை கிடைக்க வேண்டிய ரூபா 461,632,628 மீதியுடன் தொடர்புடைய மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் 03 வருடங்களாகக் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த மீதிகளின் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆ) கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 815,299,681 ஆகிய வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் வரையறுக்கப்பட்ட அவண்ட் கார் மெரிட்டைம் (தனியார்) கம்பனிக்கு (Joint Venture Avant Garde Maritime Services) 2015 முதல் 2018 வரையில் செலுத்த வேண்டிய ரூபா 762,814,313 மீதியுடன் தொடர்புடைய மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்களும் சுமார் 03 வருடங்களாக கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மீதிகளின் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

இ) கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனிக்கு அறவிடப்பட வேண்டிய தரைப் பாதுகாப்புப் பிரிவினதும் கடல்சார் பாதுகாப்புப் பிரிவினதும் வியாபாரக் கடன் மீதிகளில் முறையே ரூபா 214,893,768, மற்றும் ரூபா 1,531,591,705 ஆகக் காணப்பட்டதுடன் அந்த மீதிகளில் முறையே ரூபா 200,314,299 மற்றும் ரூபா 101,973,313 ஆகிய கடன்பட்டோர் மீதிகளுடன் தொடர்புடைய மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், தரைப் பாதுகாப்புப் பிரிவின் ரூபா 26,946,884 க்கும் கடல்சார் பாதுகாப்புப் பிரிவின் ரூபா 361,544 க்கும் மாத்திரமே உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருந்தன. அதற்கிணங்க, கடன்பட்டோர் மீதிகளில் முறையே ரூபா 173,367,415 மற்றும் ரூபா 101,611,769 ஆகிய மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த மீதிகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி 06 கடன்பட்டோரின் மொத்த கடன் மீதி ரூபா 26,908,333 ஆகக் காணப்பட்டதுடன் மீதி உறுதிப்படுத்தலுக்கு இணங்க அது ரூபா 1,504,142 ஆகக் காணப்பட்டது. அதற்கிணங்க அந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கும் மீதி உறுதிப்படுத்தல்களுக்கும் இடையில் ரூபா 25,404,191 தேறிய மாற்றம் காணப்பட்டது.

ஈ) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான ரூபா 34,250,522 ஆன சீருடை மற்றும் துப்பாக்கித் தோட்டாக்களின் கையிருப்புடன் தொடர்புடைய கையிருப்பு உறுதிப்படுத்தல் அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

